முக்கிய வார்த்தைகள்:
சகோதரத்துவம்
ஒற்றுமை
ஓரிறை நம்பிக்கை
உதவி செய்தல்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**23 ஜனவரி 2026 / 04 ரஜப் ஹிஜ்ரி 1447**

# ஓரிறை நம்பிக்கை, சகோதரத்துவம், கூட்டு வலிமை

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي خَلَقَ فَسَوَّى، وَقَدَّرَ فَهَدَى، وَأَسْعَدَ وَأَشْقَى، وَأَضَلَّ بِحِكْمَتِهِ وَهَدَى. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ ٱلْعَلِيُّ ٱلْأَعْلَى، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ ٱلْمُصْطَفَى. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ وَمَنِ اهْتَدَى. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்ளுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ் அனைத்தையும் கேட்பவனாகவும் அனைத்தையும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான் என்பதையும், எந்த பாவமானச் செயலும் எந்த நற்காரியமும் அவனது அறிவு ஞானத்திலிருந்து தப்பாது, மறைந்திருக்காது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இவ்விதமான ”தக்வா” வானது, அல்லாஹ்வின் திருப்தியை நமக்கு ஏற்படுத்துகின்ற நேரான வழியின் பால் நமக்கு வழிகாட்டட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

கடந்த வார "குத்பா" பிரசங்கமானது, இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் "*சீராஹ்*" எனும் வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள "*அல்- இஸ்றா வல்- மிஃராஜ்*" எனும் அற்புதமான நிகழ்ச்சியை எடுத்துக் கூறியது. இந்த வார "குத்பா" பிரசங்கம், இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மக்காவிலிருந்து "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணம் செய்து, மதீனாவுக்கு வந்ததும் செய்த முதல் முயற்சியைப் பற்றி விவாதிக்க உள்ளது. அதுதான், முஹாஜிரீன்களுக்கும் அதாவது, மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்தவர்களுக்கும், மதீனா வாசிகளான அன்ஸாரி ஸஹாபாக்களுக்கும் மத்தியில் ஏற்படுத்திய **சகோதரத்துவ ஒப்பந்தமாகும்.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்ததும் மற்ற பல விஷயங்களுக்கு மத்தியில், ஏன் இந்த **சகோதரத்துவ ஒப்பந்தத்தை** முதன் முதலாகச் செய்தார்கள். இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென அவர்களுக்கு அழுத்தம் கொடுத்த விஷயம் என்ன?

**எனது சகோதரர்களே!**

முஹாஜிரீன் தோழர்கள், மதீனாவாசிகளான அன்ஸாரித் தோழர்களுடைய **உதவியின்** பால் உடனடியாகத் தேவையுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதையும், காரணம், முஹாஜிரீன் தோழர்கள் மக்காவில் தமது வீடுகளையும் குடும்பத்தார்களையும் உடமைகளையும் விட்டு விட்டு, வெறும் கையுடன் மதீனாவுக்கு வந்திருந்தார்கள் என்பதையும் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் அறிந்திருந்தார்கள். அதே சமயம், அன்ஸாரித் தோழர்களோ நற்காரியங்களைச் செய்வதில் ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள் என்பதையும், அவர்கள் முஹாஜிரீன்களுக்குப் பின்பு தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்றிருந்தாலும், மார்க்கத்துக்காகப் பங்களிப்புகளைச் செய்வதில் ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள் என்பதையும் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அத்துடன், **ஓரிறை நம்பிக்கையை** அடிப்படையாகக் கொண்டு, **சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும்** ஏற்படுத்தப்படும் போது,

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் விஷயத்தில், அவர்களில் ஒருவர் மற்றவருக்கு நினைவூட்டிக் கொள்வதற்கும், ஆர்மூட்டிக் கொள்வதற்கும், உதவிக் கொள்வதற்கும், ஒருவருக்கொருவர் அறிவுப்பூர்வமாக உபதேசம் செய்து கொள்வதற்கும் **உதவியாக** இருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

மேலும் அக்காலத்தில், முஸ்லிம்கள் நிச்சயமற்ற நிலை, கடுமையான சோதனைகள், சவால்கள் மற்றும் கஷ்டங்களை எதிர்கொண்டு வந்தார்கள். அந்நிலையில், வணக்க வழிபாடுகளில் தொடர்ந்து நிலைத்து நிற்பது கடினம் என்பதை நபி [ஸல்] அவர்கள் அறிந்திருந்ததால், மதீனாவுக்கு வந்ததும் முதன்முதலாக **சகோதரத்துவ ஒப்பந்தத்தை** ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தினார்கள்.

ஒன்றுபட்டு **ஒற்றுமையாக** இருக்க வேண்டுமென்ற உணர்வும், ஒருவர் மற்றவருக்கு **உதவ** வேண்டுமென்ற விருப்பமும் திருக்குர்ஆனின் போதனைகளில் ஒன்றாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 71-வது வசனத்தில் கூறுகிறான்:

وَٱلْمُؤْمِنُونَ وَٱلْمُؤْمِنَٰتُ بَعْضُهُمْ أَوْلِيَآءُ بَعْضٍۚ يَأْمُرُونَ بِٱلْمَعْرُوفِ وَيَنْهَوْنَ
عَنِ ٱلْمُنكَرِ وَيُقِيمُونَ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُونَ ٱلزَّكَوٰةَ وَيُطِيعُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥٓۚ
أُو۟لَٰٓئِكَ سَيَرْحَمُهُمُ ٱللَّهُۗ إِنَّ ٱللَّهَ عَزِيزٌ حَكِيمٌ ٧١

பொருள்: மு.:மினான ஆண்களும் மு.:மினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் நல்லதைச் செய்யத் தூண்டுகிறார்கள்; தீயதை விட்டும் விலக்குகிறார்கள்; தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள்; [ஏழை வரியாகிய] ஜகாத்தை [முறையாகக்] கொடுத்து வருகிறார்கள்; அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகிறார்கள்; அவர்களுக்கு அல்லாஹ் மிக விரைவில்

கருணை புரிவான் - நிச்சயமாக அல்லாஹ் [யாவற்றையும்] மிகைத்தவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!

தற்கால உலகில், நாமும் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறோம். எனவே நம்மிடமும் **சகோதரத்துவ** உணர்வு காணப்படுவது அவசியமாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்களின் "சீராஹ்" எனும் வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்திலிருந்து பாடம் பெறுவது அவசியமாகும். நம்மைச் சுற்றி வாழ்பவர்களுடன் நமது உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த உறவு அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வகையில், **ஓரிறை நம்பிக்கையை** அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

இது சம்பந்தமாக, இன்றைய பிரசங்கம் உங்களுக்கு இரண்டு நினைவூட்டுதல்களை வழங்குகிறது:

**முதலாவதாக: நாம் கருணைச் சிந்தனைமிக்கவர்களாக இருக்க வேண்டும்; தேவையுள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உதவுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.**

பொருளாதார **உதவிகள்**, உணர்வுப்பூர்வமான ஆதரவுகள் அல்லது மற்றவர்களின் பிரச்சனைகளைக் காது தாழ்த்திக் கேட்பது ஆகிய ஏதாவதொரு வகையில் மற்றவர்களுக்கு உதவ வேண்டும். ஒரு முஸ்லிம் மற்றவர்களுடன் உறவு கொள்ளும் போது, அதனை "அம்ரு பில் ம∴ரூ∴ப்" செய்வதற்கான வாய்ப்பாகக் கருத வேண்டும். அதாவது, சற்று முன்பு ஓதப்பட்ட திருக்குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் நன்மையை ஏவுவதற்கான வாய்ப்பாகக் கருத வேண்டும்.

ஒரு முஸ்லிம் முஸ்லிமான மற்றொரு சகோதரருக்கு **உதவும்** போது, அவர்களுக்கு மத்தியில் **ஓரிறை நம்பிக்கையின்** உறவு இருப்பதற்கு அது ஆதாரமாக அமைந்து விடும். உதவி செய்யப்படும் நபர் வித்தியாசமானப் பின்னணிகளைக் கொண்டவராக இருந்தால், இஸ்லாத்தின் சிறப்பையும்

அதன் மனிதத் தன்மையையும் வெளிப்படுத்தப்பட்டதாக அமையும். இதுதான், **ஓரிறை நம்பிக்கையையும் ஒற்றுமையையும்** அடிப்படையாகக் கொண்ட மனித உறவுகளினால் ஏற்படும் இனிமையாகும்.

**இரண்டாவதாக: நமக்கு மத்தியில் ஓரிறை நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்வதற்காக, ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொள்ள வேண்டும்.**

நமது ஓரிறை நம்பிக்கை உறுதியாக அமைய வேண்டுமெனில், நற்காரியங்களைச் செய்வதில் ஒருவர் மற்றவரை ஆர்வப்படுத்த வேண்டும். தர்மச் செயல்களையும் தொண்டுகளையும் அதிகமாகச் செய்தல், சிறப்பான நடத்தையைப் பெற்றிருப்பது, நிலையான இறை பக்தி, மார்க்கக் கல்வியைத் தேடுவதில் அர்ப்பணிப்பு, நமது மார்க்க விவகாரங்களில் பொறுப்புணர்வுடன் செயல்படுதல் ஆகியவற்றில் ஒருவரையொருவர் ஆர்வமூட்டிக் கொள்ள வேண்டும்.

இந்நற்காரியங்களை முதலில் நமக்கு நெருக்கமான நமது பிள்ளைகள், குடும்பத்தார்கள், நண்பர்கள், நாம் சந்தித்துக் கொள்ளும் நபர்கள் ஆகியோருடன் இணைந்து செய்ய வேண்டும். கடந்த கால முஸ்லிம் சமுதாயங்கள், இந்நற்காரியங்களை, ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு, கூட்டாகச் செய்ததால் வெற்றியை அடைந்தார்கள். அவ்வா'று தற்காலத் தலைமுறையினரும் வருங்காலத் தலைமுறையினரும் செய்து வெற்றியை அடையலாம்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே**!

ஆரம்ப கால முஸ்லிம் சமுதாய மக்கள், ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்வதில் உறுதியான **ஒற்றுமையுணர்வை** வெளிப்படுத்தினார்கள். எனவே, நாம் நமது வாழ்க்கையில், எந்தத் துறையில் இருந்தாலும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு **உதவும் உயிரோட்டத்தை** ஏற்படுத்திக் கொள்வோமாக! நற்காரியங்களைப் பரப்புவதில் போட்டி மனப்பான்மையுடன் செயல்படுவோமாக!

நம்மில் ஒற்றுமையின் உணர்வை ஏற்படுத்திக் கொள்வோமாக; கருணைச் சிந்தனையை வெளிப்படுத்திக் கொள்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வோமாக; **ஓரிறை நம்பிக்கையை** அடிப்படையாகக் கொண்ட விழிப்புணர்வுடன், நமது நற்காரியங்களின் தராசுகளை வலுவாக்கும் நன்மைகளைச் சம்பாதிப்போமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.